# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை
# கிருஷ்ணகிரி மாவட்டம்

**முன்னிலை :** திரு. G. அமர் ஆனந்த், B.A.LL.B (Hons), LL.M.
மாவட்ட உரிமையியல் நீதிபதி

2023–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04–ஆம் தேதி, சனிக்கிழமை

**அ.வ.எண். 70/2019 இல் இ.ம.எண். 09/2023**

TNKI13-000120-2019

சுப்பிரமணி ....மனுதாரர் / வாதி

/எதிராக/

1. மாணிக்கம் ( இறப்பு)
2. கிராம நிர்வாக அலுவலர், நொச்சிப்பட்டி
3. வட்டாட்சியர், ஊத்தங்கரை
4. வட்டார வளர்ச்சி, அலுவலர், ஊத்தங்கரை
5. மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி
6. வேலு
7. திருமால் ....எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த இடைமனுவானது 04.11.2023 அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. மூர்த்தி, அவர்களும் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G.M. சரவணன், அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டு, இந்நாள்வரை ஆய்வில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்:

## உத்தரவு

இம்மனுவானது 1908–ஆம் ஆண்டின் உரிமையியல் விசாரணை நெறிமுறைத் தொகுப்புச் சட்டத்தின் கட்டளை VI விதி 17 கீழ் வழக்குரையில் திருத்தப்பாடு செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. ***மனுதாரரின் மனுஉரைச் சுருக்கம்:*** இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் 1-ம் பிரதிவாதியான மாணிக்கம் என்பவர் கடந்த 20.06.2020-ம் தேதி இறந்து விட்டதாகவும், அவரது வாரிசுகளான மகன்கள் வேலு மற்றும் திருமால் ஆகியோரை வழக்கில் தரப்பினராக சேர்க்க 1908-ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணை நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், கட்டளை XXII விதி 4 கீழ் இடை மனு எண். 08/2023 தாக்கல் செய்யப்பட்டு, அது 18.08.2023 தேதியில் அனுமதிக்கப்பட்டதாக சாற்றுரைக்கிறார். ஆகையால் மேற்படி உத்தரவின் படி வழக்குரையில் திருத்தப்பாடுகள் செய்ய இம்மனுவினை தாக்கல் செய்து அனுமதிக்க வேண்டுரைக்கின்றார்.

2. 1-ம் பிரதிவாதி இறந்துவிட்டதாலும், 2 முதல் 5 பிரதிவாதிகள் வழக்கில் தோன்றாதரப்பினர்களாக உள்ளதாலும் தேவையற்ற கால விரையத்தை தவிர்க்க அவர்களுக்கு அறிவிப்புகள் அனுப்பபடவில்லை.

3. ***6-ம் மற்றும் 7-ம் எதிர்மனுதாரர்களின் எதிருரைச் சுருக்கம்:*** மனுதாரர் இம்மனுவினை பொய்யான மற்றும் உண்மைக்கு மாறான சங்கதிகளை தெரிவித்து தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு நிலுவையில் இருந்து வந்த நிலையில் 1-ம் பிரதிவாதி மாணிக்கம் இறந்துவிட்டார் என்பது உண்மை, என்றும் ஆனால் இறந்துவிட்ட 1-ம் பிரதிவாதிக்கு இந்த உத்தேச பிரதிவாதிகளான வேலு மற்றும் திருமால் மட்டுமே வாரிசுகள் இல்லை என்றும் சாற்றுரைக்கின்றனர். இறந்த 1-ம் பிரதிவாதிக்கு மகளும் உத்தேச பிரதிவாதிகளுக்கு சகோதரியுமான சாந்தி என்பவரை விட்டு விட்டும், 1ம் பிரதிவாதியின் மனைவி சந்திரமதி

என்பவரையும் விட்டு விட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுரைக்கின்றனர். ஏற்கனவே இடை மனு. 06/2023, 07/2023, 08/2023 மேற்படி சங்கதிகளை தெரிவித்து இருந்தும் அவர்களை சேர்க்காமல் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வேண்டுரைக்கின்றனர்.

4. ***தீர்வுகாண வேண்டிய வினா:*** இம்மனுவில் முக்கியமாக தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

5. ***சாட்சியம்:*** இம்மனுவிற்கு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

***விவாதம்:***

6. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலினைக்கப்பட்டன. இவ்வழக்கு நிலுவையில் இருந்த வந்த நிலையில் 1–ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்று வாதி தரப்பில் 09.12.2020 தேதியன்று குறிப்புரை தாக்கல் செய்யப்பட்டு, அதற்கு பின்னிட்டு 1–ம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்த்து இடை மனு எண். 07/2023 மற்றும் 08/2023 தாக்கல் செய்யப்பட்டு அவை கடந்த 18.08.2023–ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக மனுதாரர் / வாதி தரப்பில் வழக்குரையை திருத்தம் செய்வதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கோரியுள்ள திருத்தபாடு விவரங்களை பரிசீலிக்கையில் அது 1–ம் பிரதிவாதியின் இறப்பை பதிவு செய்யவும் உத்தேச தரப்பினர்களான வேலு மற்றும் திருமால் ஆகியோரை வழக்கில் 6, 7 பிரதிவாதிகளாக சேர்க்கவும் வழக்கு பரிகாரத்தை இறந்த 1–ம்

பிரதிவாதிக்கு பதிலாக 6, 7 பிரதிவாதிகளை சேர்த்து திருத்தம் செய்ய கோரப்பட்டுள்ளது. உத்தேச பிரதிவாதிகள் / 6, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இறந்த 1–ம் பிரதிவாதிக்கு சாந்தி என்ற மகள் மற்றும் சந்திரமதி என்ற மனைவி இருப்பதாகவும் அவர்களை விட்டு விட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இம்மனு நிலைக்கதக்கதல்ல என்று எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். ஆனால் சாந்தி மற்றும் சந்திரமதி என்பவர்களின் விவரங்களோ அல்லது 1–ம் எதிர்மனுதாரரின் வாரிசு சான்றிதழோ எதுவும் 6, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால் 6, 7 எதிர்மனுதாரர்களின் சகோதரி மற்றும் அவரது தாயாரை சேர்க்காமல் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று நிரூபிக்கப்படாத ஒரே காரணத்திற்காக மட்டுமே இம்மனுவினை தள்ளுபடி செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வாரிசுகள் பற்றியோ அல்லது வாரிசு ஆகா கோருபவர்கள் பற்றியோ ஏதேனும் பிரச்சனை இருக்குமாயின் அது கட்டளை XXII விதி 4–ன் கீழ் மனு அனுமதிக்கபட்டுள்ள காரணத்தினால் மட்டுமே இறுதி முடிவை எட்டிவிட்டதாக கருத இயலாது என்றும், வாரிசு உரிமை குறித்த பிரச்சனைகளை வழக்கு விசாரணையின் போது எடுத்து வாதிடலாம் என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **தயா ராம் –எதிர்– ஷியாம் சுந்தரி,**[1] **ஜலதி சுகுணா –எதிர்– சத்யா சாய் சென்ட்ரல் ட்ரஸ்ட்,**[2] **சுரேஷ்குமார் பன்சல் –எதிர்– கிருஷ்ணா பன்சல்,**[3] **வரதராஜன் –எதிர்– கனகவல்லி,**[4] என்ற தீர்வு முடிவில் உத்தரவு இட்டுள்ளது. ஆகையால் வாரிசை சேர்க்காமல் தாக்கல் செய்திருப்பது மட்டுமே மனுவினை தள்ளுபடி செய்ய காரணமாக அமையாது என்றும், ஏற்கனவே

1 Daya Ram v. Shyam Sundari, AIR 1965 SC 1049.
2 Jaladi Suguna v. Satya Sai Central Trust, (2008) 8 SCC 521.
3 Suresh Kumar Bansal v. Krishna Bansal, (2010) 2 SCC 162.
4 Varadarajan v. Kanakavalli, AIR 2020 SC 740.

இடை மனுக்கள் 07/2023 மற்றும் 08/2023 பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை நிறைவேற்றும் வண்ணமே திருத்தப்பாடுகள் அமைந்திருப்பதாலும், இம்மனுவினை அனுமதிப்பதனால் உத்தேச தரப்பினருக்கு எவ்வித பாதகமும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால் மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் இம்மனுவினை செலவுத் தொகையின்றி அனுமதிக்க இந்நீதிமன்றம் விழைகிறது.

7. ***முடிவில், இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. நீதியின் நலன் கருதி செலவு தொகை இல்லை.***

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04–ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G AMAR ANAND
District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஊத்தங்கரை

**<u>இணைப்பு</u>**

**மனுதாரர் தரப்பு சாட்சி:** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணம்:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்:** இல்லை

G AMAR ANAND
District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஊத்தங்கரை